1973 பிப்ரவரி 10]

வரையில் மேல் பட்டப் படிப்பு பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு பயிற்றுவிக்கின்ற அத்தகைய சீரிய முறை மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் பயன்படுத்திக்கொள்வதற்காகத்தான் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருக்கும் இடத்தில் இந்த மாடல் ஸ்கூல் நிறுவப்படுவது பயன்தரும் என்று கருதப்படுகிறது.

திரு. கே. டி, கே. தங்கமணி : புதுக்கோட்டையில் இருக்கும் மாடல் ஹைஸ்கூல் மாதிரி மதுரையிலும் இருக்கிறது. இதுமாதிரி எவ்வளவு ஹைஸ்கூல்கள் ட்ரெய்னிங் காலேஜோடு இணைக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது இம்மாதிரி ஒரே ஒரு பள்ளிதான் புதுக்கோட்டையில் சென்ற ஆண்டு துவக்கப்பட்டது. அடுத்த ஆண்டு சென்னையில் இங்கிருக்கிற பெண்கள் ஆசிரியைப் பயிற்சிக் கல்லூரியோடு பெண்களுக்கு ஒரு மாடல் ஹைஸ்கூல் வைக்கலாமா என்று கருதப்பட்டிருக்கிறது. இதில் மாநிலம் பூராவிலும் உள்ள மாணவர்கள் தேர்வு எழுதி அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்தான் இந்த மாடல் ஸ்கூலில் சேர்க்கப்படுகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது எவ்வளவு மாடல் ஹைஸ்கூல்கள் இம்மாதிரி இருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த டைப்பில் ஒன்று தான் சென்ற ஆண்டு தொடங்கப்பட்டது. வேறுவகையில் மாடல் ஸ்கூல்கள் இருக்கலாம். தனிக் கேள்வி போட்டால் விசாரித்து விடையளிக்கலாம். இந்த ஸ்கீம் அடிப்படையில் முதல் முதலாக சென்ற ஆண்டுதான் ஆண்களுக்கு என்று தொடங்கப்பட்டது. இன்னொன்று பெண்களுக்காக இந்த வகையில் தொடங்கலாமா என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்து வருகிறது.

திரு. இ. எஸ். தியாகராசன் : மாவட்டந்தோறும் சென்ட்ரல் ஸ்கூல் திறப்பதற்கு திட்டமிருந்ததே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ட்ரல் ஸ்கூல்ஸ் திறக்கிற கருத்து இப்போது இல்லை.

மட்டப்பாறை உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடம்.

* 102. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள மட்டப்பாறை உயர்நிலைப்பள்ளிக்கு விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியன் : இந்த ஆண்டு ஒதுக்கித் தர அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்குப் போடப்படுகிற நிபந்தனைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகிற நிலை இருந்தால் அடுத்த ஆண்டு தான் கவனிக்கப்படும். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கு ஒன்று என்று ஒதுக்கப்படுகிறது. குறைந்தது 500 மாணவர்களுக்கு மேல் இருக்கவேண்டும், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வேண்டும். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு வந்தால் அடுத்த ஆண்டு கவனிக்கப்படும். எனவேதான், விடையில் பரிசீலனையில் இருந்து வருகிறது என்று சொன்னேன். பரிசீலனையில் வெற்றிபெறுவது என்பது நிபந்தனைகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, formerly in each high school there used to be laboratories for conducting experiments easily but nowadays there are no separate laboratories and consequently, the pupils and the teachers find it very difficult to conduct experiments. So, may I know whether arrangements would be made for separate laboratories in the high schools?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 500 மாணவர்களுக்கு மேல் இருந்து வசதிக் குறைவு இருந்து, அதிக எண்ணிக்கை உள்ள பள்ளிகளில் ஆண்டு ஒன்றுக்கு கல்வி மாவட்டத்திற்கு ஒன்று வீதம் திறக்கப்படுகிறது. மாடல் லாபரட்டரி என்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று ஏற்படுத்தி வசதிக் குறைவிருக்கிற பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கு மானேஜ்மென்ட் உயர்நிலைப்பள்ளிகளில் அவர்கள் வேண்டிய சௌகரியங்களைச் செய்துதர முன்வந்தால் அங்கு இம்மாதிரியான கூடம் ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு, கழக உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தருவது மட்டுமல்ல, தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முக்கியமாக இந்த ஆண்டு கூட எட்டு பள்ளிக் கூடங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. தனியார் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 30,000 மானியமாக வழங்குகிறோம். அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 40,000

1973 பிப்ரவரி 10]

வழங்குகிறோம். ரூ. 15,000 கருவிகள் வாங்குவதற்காகவும் ரூ. 25,000 கட்டடங்கள் கட்டுவதற்காகவும், தனியார் பள்ளிகளுக்கு ரூ. 30,000 வரையிலும் உதவி செய்கிறோம். மேற்கொண்டு ரூ. 10,000 அவர்களுடைய நிதியிலிருந்து போட்டு அறிவியல் ஆய்வுக்கூடம் வைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அப்படி ஏழெட்டுப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: அதிக மாணவர்கள் உள்ள பள்ளிக் கூடங்களுக்கு இந்த மாதிரி சலுகை அளிப்பதாகச் சொன்னார்கள். அதிக மாணவர்கள் படிக்கிற பள்ளிகளுக்கு ஏற்கனவே கட்டடங்கள் இருக்கும். குறைந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கூட அழகாக இருப்பதில்லை. எனவே, 50 சத விகிதம் அதிகமான மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கும், 50 சத விகிதம் குறைந்த மாணவர்கள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கும் என்று கொடுப்பதற்கு அரசாங்கம் கவனிக்குமா? மத்திய அரசு கொடுக்கிற இந்தப் பள்ளிகளின் எண்ணிக்கையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதில் ஏதாவது ஒருவகையான நியாயத்தைத்தான் கடைப்பிடிக்கவேண்டிவரும். ஆயிரத்துச் சில்லறை மாணவர்கள் இருந்து கருவி வசதிகள் இல்லாத பள்ளிக்கூடங்களுக்கு அந்த மாணவர்கள் பயன்படுத்தத்தக்க அளவிற்கு அங்கு ஒரு ஆய்வுக்கூடம் ஏற்படுத்துவதா? 63 மாணவர்கள் இருந்து அங்கு கட்டடம் இல்லை என்பதற்காக அதற்கு ஒரு ஆய்வுக்கூடம் வழங்குவது என்பது பொருந்தாது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்காக மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் பெருமுயற்சி எடுத்து நிதி திரட்டித் தந்தால் அப்படி நிதி வழங்குவதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் ஆயத்தமாகயிருக்கிறது.

மாட்டுக்கொட்டகைகள் கட்ட மானியம்

*** 103. வினா—திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு மாட்டுக் கொட்டகைக் கட்டுவதற்கு அரசு மானியத்தொகை அளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதுவரை எத்தனை மாட்டுக்கொட்டகைகளுக்கு மானியம் அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.